Source: *Tamil Murasu,* Front Page
Date: 27 February 2018

புதிய பட்டதாரிகளின் இடைநிலை மொத்த மாத ஊதியம் கூடியது

தன்னிச்சையாக தொழில் செய்வோர் அதிகரிப்பு

தன்னிச்சையாகத் தொழில்செய்யும் (ஃபிரீலான்ஸ்) புதிய பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டில் 1.7 விழுக்காடாக இருந்த அவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 2.4 விழுக்காடாக உயர்ந்தது.

பகுதி நேர அல்லது தற்காலிக வேலைகளில் சேர்ந்த புதிய பட்டதாரிகளின் விகிதம் கிட்டத்தட்ட 8 விழுக்காடாக நீடிக்கிறது.

முழு நேர நிரந்தர வேலைகளில் சேர்ந்த புதிய பட்டதாரிகளின் விகிதம் கடந்த ஆண்டில் 78.4 விழுக்காடாகக் குறைந்தது. முந்தைய 2016ஆம் ஆண்டில் இந்த விகிதம் 79.9 விழுக்காடாக இருந்தது.

அதே நேரத்தில் அவர்களின் தொடக்க ஊதியம் உயர்ந்து, புதிய உச்சத்தைத் தொட்டது. 2016ல் $3,300ஆக இருந்த அவர்களின் இடைநிலை மாத வருமானம் சென்ற ஆண்டில் $3,400ஆக அதிகரித்தது.

சிங்கப்பூர்தேசியபல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பல் கலைக்கழகம் ஆகிய உயர்கல்வி நிலையங்கள் இணைந்து மேற் கொண்ட பட்டதாரி வேலைவாய்ப்பு ஆய்வின்மூலம் இந்தப் புள்ளிவிவரங் கள் தெரியவந்துள்ளன. கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 11,628 முழுநேர புதிய பட்டதாரிகள் பங்கேற்றனர்.

கிட்டத்தட்ட பத்தில் ஒன்பது பட்ட தாரிகளுக்கு, அதாவது 88.9 விழுக் காட்டினருக்கு அவர்களின் இறுதித் தேர்வுகள் முடிந்த ஆறு மாதங் களுக்குள் வேலை கிடைத்தது. ஆயினும், இந்த விகிதம் முந்தைய ஆண்டைவிடச் சற்றுக் குறைவு. 2016ல் இவ்விகிதம் 89.5 விழுக்காடாக இருந்தது.

மேலும் 3% பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்தபோதும் ஆய்வு மேற் கொள்ளப்பட்ட காலத்தில் அவர்கள் இன்னும் பணியில் சேராமல் இருந் தனர். முந்தைய ஆண்டில் இந்த விகிதம் 2 விழுக்காடாக இருந்தது.

ஆக அதிகமாக, சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் புதிய பட்டதாரிகளில் 93.9 விழுக்காட்டி னருக்கு இறுதித் தேர்வுகள் முடிந்த ஆறு மாதங்களுக்குள் வேலை கிடைத்துவிட்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஆகிய உயர் கல்வி நிலையங்களில் இவ்விகிதம் 90 விழுக்காட்டை ஒட்டி இருந்தது.

இடைநிலை மாத ஊதியமாக நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் $3,487ம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகப் பட்டதாரிகள் $3,500ம் பெற்றனர். இவை, 2016ஆம் ஆண்டைவிட முறையே 1.8%, 2.9% அதிகம். சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு 2016ஐப் போலவே 2017லிலும் இடைநிலை மாத ஊதியமாக $3,500 கிடைத்தது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழ கத்தைப் பொறுத்தமட்டில், வர்த்தகப் பகுப்பாய்வுத் துறை, யேல்–என்யுஎஸ் கல்லூரி மாணவர்களின் வேலை வாய்ப்பு விகிதம் அதிகமாக இருந் தது. வர்த்தகப் பகுப்பாய்வுத் துறை யில் பயின்றவர்களில் 97.6 விழுக் காட்டினருக்கு வேலை கிட்டியது. அவர்களின் இடைநிலை மாத ஊதியம் $4,000ஆகப் பதிவானது.

யேல்–என்யுஎஸ் கல்லூரியின் முதல் தொகுதி மாணவர்களில் 93.3 விழுக்காட்டினர் வேலை தேடிக் கொண்டனர். அவர்களின் ஒட்டு மொத்த இடைநிலை ஊதியம் $3,500.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இந்த மூன்று பல்கலைக்கழகங்களி லும் வர்த்தக நிர்வாகம், பொறியியல், கணினிப் பயன்பாடு, பொருளியல் துறை பட்டதாரிகளுக்கான ஊதியங் களில் அதிக உயர்வு காணப்பட்டது ஆய்வில் தெரியவந்தது.

கூட்டு பட்டதாரி வேலைவாய்ப்பு ஆய்வு முடிவுகள்

வேலைவாய்ப்புக் குறியீடுகள்	2016	2017
ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு விகிதம்	89.5%	88.9%
முழுநேர நிரந்தர வேலைவாய்ப்பு விகிதம்	79.9%	78.4%
தன்னுரிமைத் தொழில் (ஃபிரீலான்ஸ்)	1.7%	2.4%
பகுதி நேர/தற்காலிக வேலைவாய்ப்பு விகிதம்	8.0%	8.2%
இடைநிலை மொத்த மாத ஊதியம்	$3,300	$3,400

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.